**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.78/2023

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | வசந்தா |
| Husband's Name | : | குட்டிச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 64 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.03.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

**நீதிமன்ற கேள்வி –**

1. எனக்கும், குட்டிச்சாமிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் மாரியம்மாளுக்கும், குட்டிச்சாமிக்கும் திருமணஉறவுமுறை முறிந்தபிறகு நான் குட்டிச்சாமி யை திருமணம் செய்துகொண்டேன். எனக்கும், குட்டிச்சாமிக்கும் நடந்த திருமணத்தின் பயனாக எந்த குழந்தைகளும் இல்லை. எவ்வாறு திருமணமுறிவு ஏற்பட்டது என்றால் எங்களைச் சார்ந்த தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்தில் சமுதாயகூட்டத்தில் வைத்து ஊர் மக்கள் முன்பு குட்டிச்சாமிக்கும்,

மாரியம்மாளுக்கும் இடையே திருமண பந்த முறிவு ஏற்பட்டது. எங்கள் சமுதாயத்தில் பொதுவாக கணவன், மனைவி சமுதாயத்தின் முன்பு பேசிபிரிந்து அவரவர் மறுதிருமணம் செய்து கொள்ளும் வழக்கம் உள்ளது.

2. 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai